வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

நாள்: 21.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் நாளை தொடங்கி, வரும் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- உலக பாரம்பரிய குழுவின் 46 ஆவது அமர்வை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லியில் தொடங்கி வைக்க உள்ளார்.
- குரு பூர்ணிமா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் நினைவு தினம் இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது.

***<u>மழை கால கூட்டத் தொடர்</u>*** <u>1(16)</u>

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் நாளை தொடங்க உள்ளது. இக் கூட்டத் தொடரின் முதல் நாள் அன்று பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார். தொடர்ந்து நாளை மறு தினம் 2024-25 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையையும் அவர் தாக்கல் செய்ய உள்ளார்.

இந்த பட்ஜெட்டில் சமூக பொருளாதாரம் சார்ந்த முக்கிய அறிவிப்புகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா, 90 ஆண்டுகள் பழமையான வானூர்தி சட்டத்திற்கு மாற்றான சட்ட மசோதா, நிதி மசோதா உட்பட 6 மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர வங்கிகள் ஒழுங்கு முறை சட்டம், வங்கி நிறுவனங்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இக் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து மத்திய அரசின் சார்பில், புதுடெல்லியில் இன்று காலை அனைத்து கட்சி கூட்டம் மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சுமுகமாக செயல்பட

*மழைக்கால கூட்டத் தொடர் 2 (8)*

அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசு சார்பில் வைக்கப்பட்டது. இக் கூட்டத்தில மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு கிரண் ரிஜிஜூ, திரு அர்ஜூன் ராம் மெக்வால், திரு ஜேபி நட்டா, திரு சிராஜ் பாஸ்வான், திரு ராம்தான் அத்வாலே மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் திரு ஜெயராம் ரமேஷ், திரு கவுரவ் கோகோய், என்சிபி தலைவர் திரு பிரபுல்பட்டேல், திமுக வை சேர்ந்த திரு டி.ஆர் பாலு, திரு திருச்சி சிவா, ஆம் ஆத்மியை சேர்ந்த திரு சஞ்சய் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*மோடி (18)*

உலக பாரம்பரிய குழுவின் 46 ஆவது அமர்வை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை தொடங்கி வைக்க உள்ளார். புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த 46 ஆவது அமர்வு கூட்டம் வரும் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், 150 க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்திற்கும் அதிகமான தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த நிகழ்ச்சியில், யுனஸ்கோ தலைமை இயக்குநர் திரு ஆட்ரில் அசவுலே கலந்து கொள்ள உள்ளார். நிகழ்ச்சியை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்து உரையாற்றுகிறார். இதுகுறித்து பிரதமர் விடுத்துள்ள எக்ஸ் தள பதிவில், இந்தியாவில் முதன் முறையாக உலக பாரம்பரிய கூட்டம் நடைபெற உள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாப்பது குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் இந்த கூட்டம் முக்கிய பங்களிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உலக பாரம்பரியம் தொடர்பான அனைத்து விஷயங்களையும் நிர்வகிப்பதற்கும், உலக பாரம்பரிய பட்டியலில் புதிய சின்னங்களை சேர்ப்பது குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது. இந்த கூட்டத்தில் தற்போதுள்ள 124 உலக பாரம்பரிய சின்னங்களை பாதுகாப்பது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

*குரு பூர்ணிமா (19)*

குரு பூர்ணிமா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமி நாளன்று மாணவர்கள் தங்களுக்கு கல்வி கொடுக்கும் ஆசிரியர்களை போற்றும் வகையில் குரு வழிபாடு செய்வார்கள். இந்த நிகழ்வு குரு பூர்ணிமா என்று அழைக்கப்படுகிறது. மாணவர்கள் குருவை வழிபடுவதுடன், தட்சணாமூர்த்தி, கிருஷ்ண

பகவான், ஆதிசங்கரர், வேதவியாஸ் முனிவர், ராமானுஜர் போன்றோர்களையும் குரு பூர்ணிமா நாளில் வழிபடுவர். பௌத்தர்கள் குரு பூர்ணிமா நாளில் புத்தரை வழிபட்டு அருள் பெறுவர். குரு பூர்ணிமா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படும் நிலையில், நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து எக்ஸ் வளைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், குருபூர்ணிமா குடும்ப பண்டிகையாக கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இதே போல் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வும் குருபூர்ணிமாவை முன்னிட்டு தமது எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார். இதனிடையே, நாடு முழுவதும் குரு பூர்ணிமா பண்டிகை இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இன்று காலை முதல் கோவில்களில் திரண்ட பக்தர்கள் சிறப்பு வழிபாடு செய்தனர். சில இடங்களில் மக்கள் புனித நதியில் நீராடி வழிபட்டனர்.

*__கணித ஒலிம்பியாட்__* __(7)__

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா இதுவரை இல்லாத அளவில் 4 ஆவது இடத்தை பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது எக்ஸ் தள பதிவில், இந்த குழுவில் 4 தங்கம் மற்றும் 1 வெள்ளி பதக்கத்தை கொண்டு வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்த சாதனை பல இளைஞர்களுக்கு உத்வேகத்தை அளிக்கும் என்றும், கணிதத்தை இன்னும் பிரபலமாக்க உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*__இருநாட்டு பிரதமர்கள்__* __(15)__

இந்தியா-நியுசிலாந்து இடையேயான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த இரு நாட்டு பிரதமர்களும் முடிவு செய்துள்ளனர். பிரதமர் திரு நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது மூன்றாவது முறையாக பிரதமராக திரு மோடி பதவி ஏற்றுக் கொண்டதற்கு நியூசிலாந்து பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். மேலும், ஜனநாயக பண்புகளின் அடிப்படையில் ஆழமாக பகிர்ந்து கொள்ளப்பட்ட இருதரப்பு உறவுகளை முன்னெடுத்து செல்வதுடன் இருநாட்டு மக்களிடையேயான உறவுகளையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இருநாட்டு தலைவர்களும் வலியுறுத்தினர். வர்த்தகம், கால்நடை பராமரிப்பு, மருந்து பொருள் தயாரிப்பு, கல்வி, விண்வெளி உள்ளிட்ட

துறைகளில் இந்தியா-நியூசிலாந்து இடையேயான உறவுகளை அதிகரிக்கவும், இருநாட்டு பிரதமர்களும் ஒப்புக் கொண்டனர். நியூசிலாந்தில் உள்ள இந்திய வம்சாவழியினரின் நலனை பாதுகாப்பதில் அக்கறை காட்டுவதற்காக அந்நாட்டு பிரதமர் திரு லக்சனுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

*கார்கே* (6)

காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மாநிலங்களவை எதிர்கட்சி உறுப்பினருமான திரு மல்லிகார்ஜீன கார்கே வின் பிறந்த தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், திரு கார்கே நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ தாம் பிராத்தனை செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

*சர்பானந்த சோனோவால்* (19)

மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர் வழிகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் இன்று அசாம் மாநிலம் திப்ருகர் நகரின் நாலியாபூல் நகருக்கு சென்று வடிகால் மற்றும் கழிவு நீர் அமைப்பை ஆய்வு செய்தார். திப்ருகர் மக்களவை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் அவர், தவறாக வடிவமைக்கப்பட்ட வடிகால் அமைப்புக்கு ஒரு நிலையான மற்றும் நடைமுறை தீர்வை உருவாக்க அனைத்து முயற்சிகள், வளங்கள் மற்றும் அறிவை மேம்படுத்துமாறு அவர் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார். செயற்கை வெள்ளத்திற்கான காரணங்களை ஆய்வு செய்து,அதன் அடிப்படையில் ஒரு முதன்மையான திட்டம் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக அசாம் முதலமைச்சர் திரு ஹேமந்தா பிஸ்வா ஷர்மாவையும் அவர் தொடர்பு கொண்டு பேசினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய அவர், திப்ருகரில் ஏற்பட்ட செயற்கை வெள்ளம் கவலைக்குரியது என்றும், இந்த பிரச்சனையை தீர்ப்பதில் நாம் முன்னனியில் இருக்க வேண்டும் என்றும் கூறினார். இது போன்ற செயற்கை வெள்ள பாதிப்பிற்கு ஆக்கிரமிப்பு ஒரு முக்கிய காரணம் என்றும் அவர் தெரிவித்தார். சட்டத்தை மீறும் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுத்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குடிமை அமைப்புகளை கேட்டுக் கொண்டார்.

அமித் ஷா (17)

இந்தியாவிற்குள் சட்ட விரோமாக ஊடுருபவர்களை தடுக்க ஜார்கண்ட் மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார். ராஞ்சியில் பாஜக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், பங்களாதேஷில் இருந்து ஊடுருவல் செய்வோரால் மாநில மக்கள் தொகை எண்ணிக்கை மாறி விட்டதாக கூறினார். ஆனால், வாக்குகளுக்காக அம்மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். நாட்டிலேயே ஊழல் மிகுந்த அரசாக ஜார்கண்ட் அரசு திகழ்வதாக அவர் குற்றம் சாட்டினார். ஜார்கண்ட் மாநில வளர்ச்சி பணிகளுக்காக காங்கிரஸ் கூட்டணி அரசு வெறும் 84 ஆயிரம் கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்கிய நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு 3 லட்சம் கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கியதாக அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட இம் மாநிலத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஜார்கண்ட் மாநிலத்தில் நக்சல் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கிஷண்ரெட்டி (17)

கனிம வளத்துறையில் சுய சார்பு நிலையை அடைவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று மத்திய நிலக்கரி சுரங்கத் துறை அமைச்சர் திரு கிஷண்ரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார். ஐதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், நிலக்கரி துறையில் நாடு தன்னிறைவு பெற்றுள்ளதாக தெரிவித்தார். வரும் காலங்களில் கனிம வளத்துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும அவர் தெரிவித்தார். சுரங்கம் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மேம்பாட்டிற்காக வெளிப்படையான முறையில் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியா உலக அளவில் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதிகரித்து வரும் கனிம வள தேவையை கருத்தில் கொண்டு அதன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் புதிய மற்றும் ஆக்கப் பூர்வமான வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில், முக்கிய கனிம வளத்தின் 2 ஆவது மற்றும் 3 ஆவது மின்னனு ஏலத்தில் பங்கேற்க உள்ளவர்களுக்கு அனுமதி கடிதங்களை அவர் வழங்கினார்.

*பாஜக மாநாடு* (8)

மகராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு புனே வில் இன்று பாஜக வின் ஒருநாள் மாநாடு நடைபெற உள்ளது. இம்மாநாட்டை பாஜக வின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு நிதின் கட்கரி தொடங்கி வைக்க உள்ளார். இம்மாநாட்டில், சுமார் 5 ஆயிரத்து 300 நிர்வாகிகள் பங்கேற்க உள்ளதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு சந்திரசேகர் பவான்குலே தெரிவித்துள்ளார். நிறைவு கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பங்கேற்க உள்ளார்.

*சிலைமாலை*(9)

புதுச்சேரியில் நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, புதுச்சேரி அரசு சார்பில், கருவடிக்குப்பம் கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள அவரது சிலைக்கு சட்டப் பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு சாய் சரவணன் குமார், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசு கொறடா திரு ஆறுமுகம், முதல்வரின் பாராளுமன்ற செயலர் திரு ஜான்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, திரு ரமேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.